2. **“பாவம் செய்கிற ஆத்துமா சாகும்” – எசே 18:4,20**

a. இந்த அதிகார பகுதியில் நாம் எல்லாருமே நம்முடைய ஆத்துமாவின் மீது பொறுப்புடையவர்களாய் இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்துக்கொள்கிறோம், தகப்பனின் பாவத்தை பிள்ளைகள் சுமப்பதில்லை, என்பதே இந்த அதிகாரத்தின் முக்கியமான கருத்தாக இருக்கிறது, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவத்திற்கு தங்களுடைய பிதாக்களை குற்றசாட்டினார்கள் (வ 2,3), ஆனால் இதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார், நாம் ஒவ்வொருமே நம்முடைய பாவத்திற்கு நாமே பொறுப்புடையவர்களாய் இருந்து, மனந்திரும்ப வேண்டும் (வ 30,32)

b. **ஆத்துமா சாகும் என்பதன் அர்த்தம் என்ன?**

i. ஆத்துமா தேவனிடமிருந்து நமக்கு வந்ததால், அது நித்தியமானது, அதற்கு முடிவில்லை, மரணத்திற்கு பின்பும் அது வாழும் என்பது நிச்சயம். (வெளி 6:10; வெளி 20:4; யோவா 12:26)

ii. ஆத்துமா வாழ்க்கையின் மையமாக இருக்கிறது, இது நம்முடைய உயிராக, உணர்வாக, அறிவாக மற்றும் பகுத்தறிவாக இருக்கிறது (மாற் 8:36,37).

iii. ஆத்துமாவின் பிறப்பிடம் தேவனாக இருக்கிறார், ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனிடமிருந்து வந்தது, என்பதால் அந்த ஆத்துமா தேவனோடு இருந்தால், அது ஜீவன் உடையதாக இருக்கும் (ஆதி 2:7).

iv. பாவம் செய்யும் போது ஆத்துமா தேவனை விட்டு பிரிவதால், ஆத்துமா மறித்த நிலைக்கு செல்கிறது. (எசா 59:1,2; எபே 2:1)

v. நம்முடைய ஆத்துமாவை மீட்கவே தேவன் தம்முடைய குமாரனை ஜீவ பலியாக கொடுத்தார், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மனம்திரும்பி, ஞானஸ்நானம் பெறும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகின்றன. (அப் 2:38)

c. **மனம்திரும்புதல் ஆத்துமாவை காப்பாற்றும் (எசே 18:30,32)**

**i.** “மனந்திரும்புதல்” ( repentance, change your mind, turn, restore)-

**1.** மனந்திரும்பு என்கிற பதம் எசேக்கியேல் புத்தகத்தில் 64 முறை வந்துள்ளது, அதைப்போலவே எரேமியா புத்தகத்தில் 115 முறை வந்துள்ளது.

2. கிறிஸ்தவராக மாற மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுப்பது என்பது அவசியமாய் இருப்பது போலவே ஞானஸ்நானத்திற்கு பின்பும் மனந்திரும்புதல் அவசியமாகிறது.

3. மனந்நிரும்புதல் என்பது ஒருவர் தன்னுடைய மனதை மாற்றுவது என அர்த்தப்படுகிறது (அ) தான் போகும் பாதை மாற்றிக்கொள்வது என அர்த்தப்படுகிறது.

    a. வெளி 2:5 – "மனம்திரும்பு" , ஆதியில் செய்த கிரியைகளை செய்" (change your mind, change your attitude)

    b. மனந்திரும்புதல் முடிவு எடுத்தலில் ஆரம்பமாகிறது, நாம் கதவை திறப்பதா? இல்லையா? என்கிற முடிவை எடுக்க வேண்டும் என்பதோடு, எழும்பி போய் (செயல்) கதவை திறக்க வேண்டும் (வெளி 3:19,20)

    c. மனந்திரும்பியவர் தவறான வழியை விடகூடியவராய் இருப்பார் (2 கொரி 12:21; அப் 8:22)

    d. **மத்தேயு 21:28-31**

        i. "மனஸ்தாபப்பட்டுப்போனான்" (வ 29)- மனந்திரும்புதல் துக்கத்தில் ஆரம்பாகிறது (2 கொரி 7:9-11), கிரியையில் முடிவடைகிறது (அப் 26:20)

        ii. சகேயு ஒரு நல்ல உதாரணம் (லூக்கா 19:1-9)

        iii. அப்போஸ்தலர் 19:19

4. துன்மார்க்கனை குறித்து தேவனுடைய விரும்பம் என்ன? (எசே 18:23)

5. மனந்திரும்புவதை குறித்து இயேசு லூக்கா 13:6-9 -யில் கூறிய உவமை என்ன பாடத்தை நமக்கு கற்று தருகிறது.

**ii. "புது இருதயத்தையும், புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள்" (18:31)**

1. ரோமர் 12:2 – மனம் புதிதாகிறதினால் (renewing, renovation)
    a. (உ.தா) – பழைய வீட்டை, புதிய வீடாக மாற்றுவதுப்போல, பழைய காரை புதிய காராக மாற்றுவது போல
    b. நாம் நம்முடைய ஆவியை புதிதாக்கி கொள்ள வேண்டும்.
        i. தீத்து 3:5
        ii. எபே 4:23
        iii. 2 கொரி 4:16
    c. எசேக்கியேல் 36:26